# In Case of a Piped Gas Leak...

## குழாய் வழி கேஸிலிருந்து கசிவு ஏற்பட்டால்....



Turn off the gas control valve at the gas meter.

கேஸ் மீட்டரில் உள்ள கேஸ் கட்டுப்பாட்டு வால்வை மூடி விடவும்



Open all windows and doors to ventilate the area

அப்பகுதியை காற்றோட்டமாக வைத்திருக்க எல்லா ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்து வைக்கவும்



Extinguish any cigarettes or flames

சிகரெட்டுகளோ அல்லது தீயோ இருப்பின், அவற்றை அணைத்து விடவும்



Do not switch on or off any electrical or light switch

மின் சுவிட்சையோ அல்லது விளக்கு சுவிட்சையோ போடவோ அல்லது அணைக்கவோ செய்யாதீர்



Do not try to detect a gas leak with a naked flame

தீப்பொறி கொண்டு கேஸ் கசிவை கண்டுபிடிக்க முயலாதீர்



Do not use mobile phone in the area of gas leak

கேஸ் கசிவாகும் பகுதியில் மொபைல் தொலைபேசியை பயன்படுத்தாதீர்

Leave the premises if there is a strong smell of gas in the premises and call City Gas 24-Hr Hotline at Tel: **1800 752 1800** to report any gas leak.

வளாகத்தில் கேஸின் வாசம் அடித்தால், வளாகத்தை விட்டு வெளியேறுவதுடன், கேஸ் கசிவை பற்றி புகார் செய்ய தொலைபேசி: **1800-752 1800** ல் சிட்டி கேஸ் 24-மணி நேர ஹாட்லைனை அழைக்கவும்




**Energy Market Authority**

991G Alexandra Road Singapore 119975

Tel: 6835 8000 Fax: 6835 8020

**www.ema.gov.sg**



Printed in March 2009


# Safety tips on Piped Gas

## குழாய் வழி கேஸ் பாதுகாப்புக்கான உதவிக்குறிப்புகள்



Energy Market Authority

## Engage a licensed worker to perform piped gas service work

## குழாய் வழி கேஸை பழுது பார்க்க ஒரு உரிமம் பெற்ற பணியாளரை அமர்த்துங்கள்

Piped gas installation, maintenance and repair work should only be carried out by a licensed gas service worker.

The installation, repair, replacement and testing of a piped gas appliance should also be carried out by a licensed gas service worker or a licensed gas service worker (restricted). The licensed gas service worker (restricted) is only permitted to install, repair, replace and test piped gas appliances but not piped gas installation.

குழாய் வழி கேஸை நிறுவும், பராமரிக்கும் மற்றும் பழுது பார்க்கும் பணி, உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளர் ஒருவரால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.

ஒரு குழாய் வழி கேஸ் சாதனத்தை நிறுவும், பழுது பார்க்கும், மாற்றும் மற்றும் பரிசோதனை செய்யும் பணிகளும், உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளர் அல்லது உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளர் (வரம்புக்குட்பட்டது) ஒருவரால் செய்யப்பட வேண்டும். உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளர் (வரம்புக்குட்பட்டது) ஒருவருக்கு குழாய் வழி கேஸ் சாதனங்களை நிறுவவும், பழுது பார்க்கவும், மாற்றவும், பரிசோதனை செய்யவும் மட்டுமே அனுமதி உண்டே தவிர, குழாய் வழி கேஸை நிறுவுவதற்கு அல்ல.

A licensed gas service worker or licensed gas service worker (restricted) will have a card licence issued by EMA. The card licence shows an EMA logo, a licence number, a photograph of the person and the validity date of the licence.

உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளர் அல்லது உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளர் (வரம்புக்குட்பட்டது) ஒருவரிடம் இஎம்ஏயால் வழங்கப்பட்ட உரிம அட்டை இருக்கும். இஎம்ஏ சின்னம், உரிம எண், அந்நபரின் புகைப்படம் மற்றும் உரிமம் காலாவதியாகும் தேதி ஆகியவற்றை இந்த உரிம அட்டை கொண்டிருக்கும்.

You may check with Energy Market Authority whether a person is a licensed gas service worker or licensed gas service worker (restricted) by calling **6835-8075** or through EMA website at **www.ema.gov.sg**

எனர்ஜி மார்கெட் அத்தாரிட்டியை **6835-8075**ல் அழைப்பதன் மூலமாகவோ, அல்லது **www.ema.gov.sg** என்ற இஎம்ஏவின் இணையத்தளத்தின் மூலமாகவோ, ஒருவர் உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளரா அல்லது உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளர் (வரம்புக்குட்பட்டதா) என்பதை நீங்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்.




## Certifying the test of a piped gas appliance

## ஒரு குழாய் வழி கேஸ் சாதனத்தின் பரிசோதனைக்கு சான்றளித்தல்

When a piped gas appliance is installed, repaired or replaced, a test will need to be carried out to ensure that the piped gas appliance is safe for use.

After the successful completion of the test, the licensed gas service worker or licensed gas service worker (restricted) performing the test will issue a written statement to you certifying that the piped gas appliance has been tested and is safe for use.

ஒரு குழாய் வழி கேஸ் சாதனம் நிறுவப்படும் போதோ, பழுது பார்க்கப்படும் போதோ, அல்லது மாற்றப்படும் போதோ, அந்த குழாய் வழி கேஸ் சாதனம் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பானது என்பதை உறுதி செய்து கொள்ள ஒரு பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

பரிசோதனை வெற்றிகரமாக முடிந்த பின்னர், அந்தப் பரிசோதனையை நடத்திய உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் பணியாளரோ அல்லது உரிமம் பெற்ற கேஸ் பழுது பார்க்கும் (வரம்புக்குட்பட்டது) பணியாளரோ, குழாய் வழி கேஸ் சாதனம் பரிசோதிக்கப்பட்டது என்பதையும் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பானது என்பதையும் குறிப்பிடும் எழுத்து வடிவிலான ஒரு சான்றிதழை உங்களுக்கு வழங்குவார்.

# Piped Gas Safety Tips

# குழாய் வழி கேஸ் பாதுகாப்புக்கான உதவிக்குறிப்புகள்



**Keep all combustible materials away from gas cookers**

தீப்பிடிக்கக்கூடிய எல்லா பொருட்களையும் கேஸ் குக்கரிலிருந்து தள்ளி வைக்கவும்



**Open all windows while cooking**

சமைக்கும் போது எல்லா ஜன்னல்களையும் திறந்து வைக்கவும்



**Do not leave the cooker unattended when cooking**

சமைக்கும் போது குக்கரை கவனிக்காமல் விடாதீர்



**Leave the oven door slightly open when using the gas grill**

கேஸ் கிரில்லைப் பயன்படுத்தும் போது அவெனின் கதவை லேசாகத் திறந்திருக்குமாறு வைக்கவும்



**Keep the access to gas control valve at the gas meter clear from obstruction**

கேஸ் மீட்டரிலான கேஸ் கட்டுப்பாடு வால்வை அணுகும் பாதையை தடைகள் இல்லாதவாறு வைத்திருக்கவும்



**Ensure that pots on the cooker do not boil over**

குக்கரின் மேல் உள்ள பாத்திரங்கள் பொங்கி வழியாமல் பார்த்துக் கொள்ளவும்



**Keep your cooker clean and in good working order**

உங்களின் குக்கரை சுத்தமாகவும், நல்ல இயங்கும் நிலையிலும் வைத்திருக்கவும்



**Keep a fire extinguisher of multi-purpose dry powder type handy**

மல்ட்டி-பர்பஸ் உலர் பொடி வகையிலான தீயணைப்பு சாதனத்தை தயார் நிலையில் வைத்திருக்கவும்